jalk.ch
இணைய பயிற்சி

இளம் பருவத்தினர் பாதுகாப்பை தலைப்பாகக் கொண்ட ஒரு பயிற்சி உணவகம், சில்லறை விற்பனை மற்றும் சிற்றுண்டியகங்களில் மதுபானம்.

# முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் – ஒரு சுருக்கம்

- இளம் பருவத்தினரை பாதுகாக்கும் சட்ட விதிமுறைகளை நன்றாகத் தெரியும் வண்ணம் உங்கள் உணவகம், தொழில் நிறுவனம் அல்லது சிற்றுண்டி கடைகளில் வைக்கவும். இளம் பருவத்தினருக்கு இந்த விதிமுறைகளைத் தேவைப்பட்டால் நினைவூட்டவும்.
- குழந்தைகளுக்கோ அல்லது சட்டப்படி வயது வரம்பை எட்டாத இளம் பருவத்தினருக்கோ எக்காரணத்தைக் கொண்டும் மதுபானத்தை விற்பனைசெய்யாதீர்கள்.
- உங்களுடைய வாடிக்கையாளருடைய வயதைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்படின், அரசாங்க அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கேட்கவும்.
- கூடியவரை அடையாள அட்டையை பார்ப்பது உகந்தது. 19 அல்லது 20 வயது இளைஞர்களைக் கேட்பதிலும் எந்தத் தவறுமில்லை.
- உங்களுக்கு எதிரே இருப்பவர் அதை வேறு கோணத்தில் பார்த்தாலும், அவர்களது வயதை நீங்கள் சரிபார்ப்பது சரியான ஒன்றே.
- 16 வயதுக்கு மேற்பட்டவர்களை “நீங்கள்“ என்றே அழைக்கவும், இதனால் மரியாதை இருக்கிறது என்று அவர்கள் உணருவார்கள்.
- அமைதியாக இருங்கள் – கோபத்திற்கு பதில் கோபம் காண்பிப்பது யாருக்கும் உதவாது.
- விவாதத்தில் இறங்காதீர்கள்.உங்கள் தெளிவானபதில்:அடையாளஅட்டை இல்லையேல் மதுபானம் இல்லை.
- பரபரப்பான சூழ்நிலையிலும் நீங்கள் அமைதியைக் கடைப்பிடியுங்கள்.
- உங்கள் வாடிக்கையாளரை உங்களுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் குற்றப்பணம் பணம் செலுத்த வேண்டியிருக்கும், அல்லது நீங்கள் வேலையை இழக்க நேரிடும் அத்துடன் உங்கள் கடை உரிமையாளர் மதுபானம் விற்பதற்கான உரிமத்தை இழந்து விடுவார் என அவர்களுக்கு விளக்கிக் கூறவும்.
- உங்கள் நிலைமை கடினமாக இருந்தால் (உதாரணமாக வாடிக்கையாளர்கள் மிகுந்த கோபத்துடன் இருந்தால்), உங்கள் மேலாளர் அல்லது உடன் பணிபுரிபவரின் உதவியை நாடவும்.